# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **180/2025** |
| **பெயர்: PW-1** | **அன்பரசி** |
| **கணவர் பெயர் :** | **சுரேஷ்குமார்** |
| **வயது:** | **31/2026** |
| **ஊர்:** | **நன்னிமங்கலம்** |
| **தாலுக்கா** | **கூத்தாநல்லூர்** |
| **வேலை** | **வீட்டுக்குடித்தனம்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of July 2026.

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 2.30 PM</u>**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி.உஷா (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

**<u>எதிரி தரப்பு முதல் விசாரணை</u> :**

1. நான் இவ்வழக்கில் எதிரி ஆவேன். என் கணவர் பெயர் சுரேஷ்குமார் ஆகும். எனது கணவர் சுமார் 10 வருடங்களாக அருண் என்பவரிடம் வரவுசெலவு மேற்கொண்டுவந்துள்ளார். அந்த 10 வருடங்களில் பெற்ற பணத்தை திருப்பி கொடுத்துவிடுவார். 2021 ஆம் ஆண்டு என் கணவர் அருண் என்பவரிடம் 2 பூர்த்திசெய்யப்படாத கையொப்பம் இடப்படாத என்னுடைய காசோலைகளை, கடன் இருந்ததால் கொடுத்தார். 2023 வரை கொடுக்கல் வாங்கல் அருன் என்பவரிடம் சுமூகமாக போய்கொண்டிருந்தது. 2023 க்கு பிறகு எங்களால் வட்டி கொடுக்கமுடியவில்லை, அதனால் அவர் எங்கள் வீட்டில் வந்து பணத்தை கேட்டார், அதன்பின் என் கணவர் அருண் என்பவருக்கு ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தார்.

2. 15.12.2025 அன்று அருண் என்பவர் அவர் எங்களிடம் கொடுத்திருந்த ரூ.2 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயை திருப்பி கேட்டார். அதற்கு எனது கணவர் அருண் வீட்டிற்கு சென்று ரூ. 1 இலட்சத்தினை 2025 ஆம் வருடம் டிசம்பர் மாதம் கொடுத்துவிட்டார்.

3. அதன்பின் அருண் என்பவர் 2025 ஆம் வருடமே சிங்கப்பூருக்கு சென்றுவிட்டார். சிங்கப்பூரில் இருந்து அருண் என் கணவருக்கு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக ரூ. 2 இலட்சம் ரூபாய் தரும்படி கூறினார். அதனால், என் கணவருக்கும் அருண் என்பவருக்கும் தொலைபேசியில் வாக்குவாதம் ஏற்பட்டு பிரச்சனை ஆகிவிட்டது. அதனால் 2025 ஆம் வருடம் டிசம்பர் மாதம் கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் எனது கணவர் அருன் என்பவர் மீது புகார் கொடுத்தார். காவல்நிலையத்தில் இருந்து அருண் என்பவருக்கு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு என் கணவர் திருப்பி செலுத்திவிடுவார் என்று கூறினார்கள். பிப்ரவரி 2026 அன்று என் தந்தை மற்றும் இரண்டு நபர்கள் அருண் என்பவர் வீட்டிற்கு சென்று ரூ.2 இலட்சத்தினை அருண் என்பவரின் மனைவியான கீதா என்பவரிடம் கொடுத்துவிட்டார்கள். அதன்பின் அருண் என்பவர் எங்களை தொல்லை செய்யவில்லை. சில நாட்கள் கழித்து நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்தது. அதைப்பற்றி என் கணவரிடம் கூறினேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியாது.

4. நான் 2021 ஆம் ஆண்டில் இருந்து எனது தாயார் வீடான நன்னிமங்கலம் எனும் ஊரில் கூரைவீட்டில் நான், எனது தந்தை, எனது தாய் மற்றும் எனது குழந்தைகளுடன் இன்றுவரை வசித்துவருகிறேன். நான் கூரை வீட்டில் வசித்துவருகிறேன் என்பதற்கு சான்றாக கூத்தாநல்லூர் வட்டம், 44,காக்கையாடி,43 சாத்தனூர் VAO வழங்கிய ஆவணத்தை சமர்பிக்கிறேன், அந்த ஆவணம் **எ.த.சா.1** ஆக (புகார்தாரர் தரப்பு ஆட்சேபணையுடன்) குறியீடுசெய்யப்படுகிறது. எனது ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) **எ.த.சா.2** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எனது குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **எ.த.சா.3** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எனது வாக்காளர் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **எ.த.சா.4** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எனது ICICI Bank Passbook–ன் முகப்பு பக்கம் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **எ.த.சா.5** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. எனது Indian Bank Passbook–ன் முகப்பு பக்கம் நகல் (அசலுடன்

ஒப்பிடப்பட்டது) **எ.த.சா.6** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.
**முடிக்கப்பட்ட நேரம் 02.58PM**
**(எதிரி தரப்பு முதல் விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-மா.விஷால் ஆனந்த்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.